**உடுநுவர பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மே 11 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 31 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 27 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உடுநுவர பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1987 இன் 15 இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 154 இன் பிரகாரம் ஏல விற்பனை மேற்கொள்ளப்படும் காணிகளில் இருந்து பிரதேச சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 1,135,000 தொகை பெறுமதியான 2 ஏக்கர் 2 ரூட் 37 பர்சஸ் காணியின் பெறுமதியினை மீளாய்வாண்டின் போது கணக்கீடு செய்திருக்கவில்லை

(ஆ) ஒரு ஊருக்கு ஒரு வேலை என்ற செயற்திட்டத்தின் கீழ் உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த 06 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டு இறுதித் திகதி வரை பூர்த்தி செய்திருக்கவில்லை. அத்துடன் அச் செயற்திட்டம் தொடர்பாக ரூபா 4,001,103 இற்கான கடன்கொடுத்தோர் பெறுமதியினை நிதிக் கூற்றுக்களில் காட்டியிருக்கவில்லை.

(இ) 1997 ஆகஸ்ட் 08 திகதி சபையினால் காணி உறுதி இலக்கம் 17310 இன் கீழ் கம்புறாதெனிய விஹாரவத்த என்ற காணிக்காக 29 வருட குத்தகை உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டு அங்கு 70 அடி நீளம் 30 அடி அகலம் கொண்ட சனசமூக நிலையம் ஒன்று நிர்மாணித்திருத்த போதிலும், அக் கட்டிடத்தின் பெறுமதி ரூபா 3,720,000 இற்கான தொகை காணிகள் மற்றும் கட்டிடங்களின் கீழ் மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது ரூபா 324,979 பெறுமதியான உடன்படிக்கைகள் கையொப்பமிடப்படாத 06 ஒப்பந்த வேலைகளின் பெறுமதி கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் போது 11 வாகனங்கள் தொடர்பாக காப்புறுதி கட்டணமாக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 202,891 இற்கான பெறுமதியில் ரூபா 137,334 தொகை 2015 ஆம் ஆண்டிற்கானவையே. அப் பெறுமதி முன்கொடுப்பனவு என அட்டுறுப்படுத்தியிருக்கவில்லை.

(ஊ) நாட்குறிப்பு இலக்கம் 41 மற்றும் 42 மூலம் முறையே ரூபா 2,616,719 தொகையும் ரூபா 409,748 தொகையும் மிகையாகக் கணக்கீடு செய்திருந்த கடன்பட்டோர் என கூட்டுத்தொகை ரூபா 3,026,467 தொகை முறையான அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளாமல் திரண்ட நிதியத்திற்கு சீராக்கல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு இறுதித் திகதியன்று நிலுவையாகக் காணப்பட்ட கடை வாடகை வருமானம் கடை வாடகை வருமானப் பொது நாட்குறிப்பின் பிரகாரம் ரூபா 289,831 தொகை எனினும் கடை வாடகை வருமானப் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 314,415 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 24,584 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) பட்டோலைகளின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான கடன்கொடுத்தோர் பெறுமதி ரூபா 62,888,939 தொகை எனினும் பேரேட்டுக் கணக்கின் பெறுமதி ரூபா 69,415,996 ஆக காணப்பட்டமையால் ரூபா 6,527,057 இற்கான இணக்கமின்மை காணப்பட்டது.

(இ) பதிவேடுகளின் பிரகாரம் ஒழுங்குபடுத்தல் கட்டணம் ரூபா 1,484,133 தொகை எனினும் குறிப்பிட்ட நாட்குறிப்பின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான ஒழுங்குபடுத்தல் பெறுமதி ரூபா 1,418,666 ஆகக் காணப்பட்டமையால் ரூபா 65,467 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

(ஈ) மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் நூலகப் புத்தகங்களின் பெறுமதி ரூபா 4,901,086 தொகை எனினும் கணிப்பீட்டு சபை அறிக்கையின் பிரகாரம் ரூபா 5,031,026 ஆக காணப்பட்டமையால் ரூபா 129,940 இற்கான இணக்கமின்மையொன்று காணப்பட்டது.

(உ) வீட்டு வாடகை வைப்புக்கள் கட்டுப்பாட்டுக் கணக்கில் ரூபா 568,330 இற்கான பட்டோலையின் பிரகாரம் ரூபா 67,816 இற்கான மீதியாக காணப்பட்டமையால் ரூபா 500,514 இற்கான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

(ஊ) பலவின வைப்புப் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 101,048 இற்கான செலவு மீதி நிதிக் கூற்றுக்களில் ரூபா 220,147 இற்கான வரவு என காணப்பட்டமையால் ரூபா 321,195 இற்கான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டது.

1.3.3 பெற வேண்டிய கணக்குகள்

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 67,577,894 ஆகக் காணப்பட்டதுடன் அவற்றில் 01 வருட காலத்தை மிகைத்திருந்த 08 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 20,515,778 ஆகக் காணப்பட்டது.

1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டு இறுதித் தினத்தில் உள்ளவாறு நிர்மாண வேலை கடன்கொடுத்தோர் கணக்கின் மீதி ரூபா 77,354,567 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் 01 வருட காலத்தை மிகைத்திருந்த கடன்கொடுத்தோர் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 7,938,571 ஆகக் காணப்பட்டது.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

05 கணக்கு விடயங்கள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 10,062,472 இற்கான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1983 இன் 24 ஆம் இலக்க விதவை ஆண்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியச் சட்டம் | சபையில் கடமையாற்றும் முகாமைத்துவச் சேவை I ஆம் தர பெண் அலுவலரிடம் 2012 ஆண்டில் இருந்து அலுவலக உதவியாளர் தரம் I பெண் அலுவலர் |

| | | |
|---|---|---|
| | | ஒருவரின் 2006 ஜூன் மாதம் முதலும் கூட்டுத்தொகை ரூபா 105,298 இற்கான விதவை ஆண்கள் மற்றும் அநாதை ஓய்வூதியச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணக்கமின்றி அறவீடுகள் நிறுத்தப்பட்டிருந்தன. இதற்கான ஓய்வூதியத் திணைக்களத்தின் அங்கீகாரம் ஏதும் பெற்றிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள்<br>---------------------------------------- | |
| | (i) நி.பி. 371(2)(ஆ) | 05 சந்தர்ப்பங்களின் கூட்டுத்தொகை ரூபா 220,000 தொகை பெறுமதியான முற்பணங்கள் பிரமாணங்கள் குறிப்பிடப்பட்டுள்ள வரையறையினை மிகைத்து வழங்கியிருந்தது. |
| | (ii) நி.பி. 571(2) மற்றும் (3) | வைப்புப் பேரேட்டில் 2 வருடங்கள் முதல் 34 வரையான காலம் முதல் காணப்படும் 03 வகையான வைப்புக்களின் கூட்டுப் பெறுமதி ரூபா 461,131 ஆகக் காணப்பட்டது. |
| (இ) | 2002 நவம்பர் 28 திகதிய இலக்கம் IAI/2002/02 கொண்ட திறைசேரிச் செயலாளரின் சுற்று நிருபம் பிரிவுகள் 02,03,04,05 | கணனி துணைக் கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட வேண்டும். எனினும் சபையினால் பயன்படுத்தப்படும் 14 அச்சு இயந்திரங்கள் மற்றும் 17 மொனிடர்கள் தொடர்பாக தனியாக நிலையான சொத்துகள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2014 நவம்பர் 12 திகதிய இலக்கம் 25/2014 கொண்ட பொது நிருவாக மற்றும் உள்நாட்டு விவகார அமைச்சு செயலாளரின் சுற்று நிருபம்<br>------------------------------------------------ | |
| | பிரிவு 07 | சுற்று நிருப ஏற்பாடுகளை கடைபிடிக்காமல் தற்காலிக அடிப்படையில் 06 ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் போது கூட்டுத்தொகை ரூபா 841,357 சம்பளமாக சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது. |

2. நிதி மீளாய்வு
----------------------------

2.1 நிதி விளைவுகள்
--------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 6,094,894 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,751,738 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 12,846,632 இற்கான வீழ்ச்சி ஒன்று காணப்பட்டது.

2.2 வருமான நிருவாகம்
----------------------------------

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 21,861,617 இற்கான நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்காக போதிய அளவிலான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

(அ) காணி உறுதி இலக்கம் 901 மூலம் சபைக்கு சாட்டப்பட்டிருந்த 10 பர்சஸ்கள் கொண்ட வேகிரிய எம்பில்மீதெனியே ஹேன என்ற காணி சபைக்கு 1999 ஆகஸ்ட் 03 திகதி சாட்டப்பட்டிருந்ததுடன் அந்தக் காணியின் கிராம்பு விளைச்சல் சபைக்குச் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் வெளிசராருக்கு அனுபவிப்பதற்காக இடம் அளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 516,437 பெறுமதியான பெற வேண்டிய இருப்புச் சேதங்கள் பல வருட காலமாக காணப்பட்டதுடன் அதனை அறவீடு செய்வதற்கு அல்லது தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வீதி விளக்குகள் 60 மீற்றர் தூர இடைவெளி வைத்து பொருத்தப்பட வேண்டும். எனினும் அதற்கு மாற்றமாக பொருத்தப்பட்டிருந்த 13 வீதி விளக்குகள் இலங்கை மின்சார சபையினால் அகற்றிக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

(ஆ) சபையினால் மீளாய்வாண்டின் போது சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டிய நிறுவனங்கள் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொண்டுள்ள நிறுவனங்கள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) பல்வேறு ஏற்பாடுகளின் கீழ் நிர்மாணிக்கப்பட்டிருந்த சனசமூக நிலையம் பல் கரும கட்டிடங்கள் தொடர்பாக 1 ரூட் 16 பர்சஸ் 12/35 அடி மற்றும் 70x30 அடி அளவான காணியின் உரிமையை சபைக்கு சாட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் முறையே 29 வருடங்கள் மற்றும் 30 வருடங்கள் குத்தகைக்கு பெறப்பட்டுள்ளது.

3.3 பயன்படுத்தப்படாமல் மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பயன்படுத்தப்படாது காணப்படும் இலக்கம் 19-5295 கொண்ட மற்றும் இலக்கம் 101-7146 கொண்ட இரண்டு வாகனங்களை அகற்றுவதற்கு அல்லது ஏல விற்பனை செய்வதற்கு அல்லது பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு செயற்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 ஆண்டின் போது அச்சிடப்பட்ட ரூபா 440,064 இற்கான உடுநுவர வம்சக் கதை அடங்கிய 739 புத்தகங்கள் மீளாய்வாண்டு இறுதித் தினம் அளவிலும், விற்பனை செய்யப்படாமல் காணப்பட்டது.

3.4 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரதேச சபைகளை வலுப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டு ஜூன் முதல் செப்டம்பர் வரை காலப் பகுதியில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய 04 ஒப்பந்த வேலைகளுக்காக ரூபா 4,000,000 தொகையொன்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சில் இருந்து வழங்கியிருந்த போதிலும், அவற்றில் மீளாய்வாண்டு இறுதியளவில் செலவிடப்பட்டிருந்தது ரூபா 648,480 தொகை மாத்திரமே. மீதித் தொகையாகிய ரூபா 3,351,520 தொகையினை குறிப்பிட்ட அமைச்சிற்கு அனுப்பப்படாமல் 2014 செப்டம்பர் 23 திகதி கெலிஓயா இலங்கை வங்கியின் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவையின் விதி 177 மற்றும் 178 இன் பிரகாரம் கேள்வி நடைமுறையினைக் கடைபிடிக்கப்படாமல் மீளாய்வாண்டின் போது ரூபா 5,583,467 தொகை பெறுமதியான ஒப்பந்த வேலைகள் சனசமூக அடிப்படை அமைப்புகளுக்கு சாட்டப்பட்டு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

3.5 மனித வள முகாமைத்துவம்

உடுநுவர பிரதேச சபையில் மீளாய்வாண்டின் போது 04 பதவிகளில் மிகை ஊழியர்கள் 12 உம், 06 பதவிகளில் 11 அலுவலர்கள் வெற்றிடமும் அவதானிக்கப்பட்டது.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 அகக் கணக்காய்வு

பிரதேச சபையில் அகக் கணக்காய்வு அலகு ஒன்று நிறுவப்பட்டிருந்தது. எனினும் அது 2009 ஜுன் 09 திகதிய நிதி அமைச்சு செயலாளரின் இலக்கம் DMA/2009(1) கொண்ட சுற்று நிருப ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படுத்தியிருக்கவில்லை.

4.2 பெறுகைகள் திட்டம்

மீளாய்வாண்டிற்காக ரூபா 131,346,142 இற்கான சொத்துக்களை உடைமை ஆக்கியிருந்த போதிலும் பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான பெறுகைகள் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

(அ) 02 செலவு விடயங்கள் தொடர்பாக முறையான அங்கீகாரம் இன்றி, மதிப்பீட்டுச் செலவுகள் மிகைத்தல் ரூபா 1,120,344 ஆக காணப்பட்டதுடன் அதன் வீச்சு நூற்றிற்கு 13 முதல் 21 வரை காணப்பட்டது.

(ஆ) 06 செலவு விடயங்கள் தொடர்பாக மதிப்பிடப்பட்ட செலவினை நெருங்காமை ரூபா 6,100,418 ஆகக் காணப்பட்டதுடன், அதனது வீச்சு நூற்றிற்கு 4 முதல் நூற்றிற்கு 58 வரை காணப்பட்டது.

(இ) 06 வருமான விடயங்கள் தொடர்பாக ரூபா 9,614,828 இற்கான வருமானம் மிகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதனது வீச்சு நூற்றிற்கு 4 முதல் நூற்றிற்கு 48 வரை பரவி இருந்தது.

(ஈ) 02 வருமான விடயங்களைச் சேர்ந்த 03 உப விடயங்களுக்கான பாதீட்டு வருமானம் ரூபா 301,000 ஆக காணப்பட்டதுடன், வருமானம் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) வருடாந்த பாதீடு கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் நீண்ட கால குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக உபகரணம் ஒன்றாகப் பயன்படுத்தப்பட வேண்டும். எனினும் பின்வரும் வித்தியாசங்கள் காரணமாக பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டு அலகு ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) ஒப்பந்த நிருவாகம்